*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – V Issue – 2
May -2021

# சங்ககாலப் போர்களில் ‘துணைப்படை’ குறித்த கருத்துருவாக்கம்

செல்லமுத்து,மு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், விருதுநகர் 03.

**Corresponding author: cmchellamuthu.muthu83@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலத்தில் வில், அம்பு, வாள், வேல், கேடயம், கவசம் போன்ற பல்வேறு படைக்கலன்கள் போர்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆளும் அரசர்கள் இப்படைக்கலன்களை முறையாகக் கையாளப் பயிற்சி பெற்ற வீரர்களை ஏற்றதொரு படைப்பிரிவுகளில் இடம்பெறச் செய்து பகைவர்கள் நடுங்க, அவர்களின் வீரதீரச் செயல்களை செருக்களத்தில் செவ்வனே வெளிப்படுத்தச் செய்துள்ளனர். தனிப்படை அமைப்பு ஏற்படாத ஆநிரை கவரும் தொடக்ககாலத்திலிருந்து, வீரர்கள் அணிதிரண்டு செயலாற்றியதன் நீட்சி, காலப்போக்கில் நிலையான நாற்படைகள் அமைப்பு உருவாக வழியமைத்துக் கொடுத்துள்ளன. படைகள் பல பல்கிப் பெருகிய அரசுருவாக்கச் சூழலில் அரசர்கள் தம் மண்ணையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு அல்லது பிறர் வளங்களை கைப்பற்றுவதற்கு எண்ணற்ற அகப்பகையையும் புறப்பகையையும் நாளெல்லாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அக்காலங்களில் வஞ்சினம் உரைத்து வீரர்களை ஊக்குவித்து பல்வேறு உத்திமுறைகளை உருவாக்கி மிகச்சரியான திட்டமிடுதலோடு செயலாற்றிய அரசுதான் வரலாற்றில் நீடிக்கவும் செய்திருக்கிறது. போர்க்களத்தில் உறுதியாக வாகை சூடுவதற்கு போர்முறைகளில் காலந்தோறும் புதிய பல கண்டுபிடிப்புகளும் உள் நுழைந்துள்ளன. உடலாலும், அறிவாலும், ஆயுதத்தாலும் வலிமை பொருந்தியவர்கள் ஆள்வதற்கான தகுதியை எவ்வாறாயினும் தாம் பெற்றுவிடவேண்டும் அல்லது இழந்துவிடக்கூடாது என்ற முனைப்பில் தம் நட்பு நாடுகளை ‘படைத்துணையாக வருமாறு’ வேண்டியுள்ளனர். அவ்வாறு, பெருநில வேந்தர்களின் அழைப்பையேற்று, சீறூர் மன்னர்கள் துணைப்படையாகச் சென்று பகைமுடித்து நட்பு பாராட்டிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. எனவே, பண்டைத்தமிழரின் மரபார்ந்த படையணிவகுப்பில் இடம்பெற்ற

'துணைப்படை' குறித்த கருத்துருவாக்கம் சங்கஇலக்கியப் பதிவுகளில் எங்ஙனம் இடம் பெற்றுள்ளது என்பதனை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுப் பொருள் அமைகின்றன.

குறிப்புச்சொற்கள்: படை - விளக்கம் - பண்பு - பயன் - போர்கள் - திரட்டப்படும் படைகள் - படை வகைகள் - நட்பு பாராட்டுதல் - கொடையளித்தல்

## முன்னுரை

தமிழக வரலாற்றில் பேரரசுகள் நிலைபெற்ற சங்ககால அரசியல் மற்றும் சமுதாயச் சூழலில் 'படை' என்பது அரசனின் அடிப்படை அங்கங்களாகச் செயல்பட்டுள்ளன. சமுதாயத்தின் பாதுகாப்பிற்கென உருவாக்கப்பட்ட படைகள், போரின் போது மன்னனின் மண்ணாசை உள்ளிட்ட பல்வேறு வேட்கையை நிறைவு செய்வதற்காக பெரிதும் பயன்பட்டுள்ளன. காலப்போக்கில் தனிமனிதனின் வீர விருப்பமும் போர் ஈடுபாடும் 'படை' என்ற தனியமைப்பு உருவாக வழிவகை செய்திருக்கின்றன. சங்க இலக்கியத்தில் 'படை' என்ற சொல் கையாளப்படும் இடங்களை ஆழ்ந்து நோக்கினால், அவை சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களுக்கு மட்டுமானது என்பதனை நன்குணர முடிகிறது. வேளிர் போன்ற சீறூர் மன்னர்களிடம் தொடக்கக் காலத்தில் படைகள் இருந்ததா என்பதனை அறிய முடியவில்லை எனினும், அவர்களிடமும் பிற்காலங்களில் படைகள் இருந்திருக்கின்றன என்பதற்கு சங்க இலக்கியங்கள் பரவலாகச் சான்று பகிர்கின்றன. நால்வகைப் படைகளைத் தன்னகத்தே கொண்டு அரசாண்ட மூவேந்தர்கள் பெரும் போர்களுக்கு, குறுநில மன்னர்களிடம் படையுதவி வேண்டி நின்ற சான்றுகள் சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. துணைப்படை என்பது நட்பின் பொருட்டும், ஊதியத்தின் பொருட்டும் வேறுபடுவதால் அதனை கூலிப்படை, துணைப்படை என்ற இருநிலைகளில் பகுத்துணரலாம். எனவே, சங்க இலக்கியச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு 'துணைப்படை' குறித்த பல்வேறு கருத்துருவாக்கங்களைப் பின்வருமாறு அறியலாம்.

## படை – சொற்பொருள் விளக்கம்

"படை என்பது 'படு' எனும் சொல்லடியாகப் பிறந்தது என்பர். 'படு' என்னும் அடிச்சொல்லுக்குத் தோன்ற, அழி எனும் இரு பொருளுடையது. படு, படுதல் என்ற இருசொற்களும் ஒன்றோடொன்று உறவுடையன. படுதல் என்பது உண்டாதல், தோன்றுதல், உறித்தல், மொய்த்தல், அகப்படுதல், பெய்தல், பெரிதாதல், அழிதல், சாதல், பழுதுபடுதல், சாய்தல், தொங்குதல், ஒலித்தல், பாய்தல், உடன்படுதல், ஒற்றல்" **(ந.சி.ககந்தையா பிள்ளை. செந்தமிழ் அகராதி. ப.464)** எனப் பல்வேறு பொருளுடையதாகச் செந்தமிழ் அகராதி விளக்கம் தருகின்றது. இவ்விளக்கங்களை ஆராயும் பொழுது படையென்பது, பகைவர் முன்தோன்றி, அவர்களை மொய்த்து,

அவர்கள் மீது பாய்ந்து, அவர்களை அகப்படுத்தி, சாய்த்து, வீழ்த்தி, அழித்து, ஒழித்தல் போன்ற செயல்கள் தொடர்பான பொருள் எனக் கொள்ளலாம்.

படைக்கலன்களைப் பயன்படுத்துவது படைகளாகும். வேந்தனுக்குரிய அங்கங்களுள் அதிமுக்கியமானதும், முதன்மையானதுமாக விளங்கக்கூடியது படைகளாகும். எனவேதான்,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

(திருக்குறள்.381)

என்னும் குறட்பாவில் படையினை முதன்மைப்படுத்திப் படைகளால் பாதுகாக்கப்படும் மற்ற அனைத்தையும் அதன் பின்னர் வரிசைப் படுத்தியுள்ளார் வள்ளுவர். இதனை, திரிகடுகம் நூலாசிரியர் நல்லாதனார் "பத்திமை சான்ற படை" (திரிகடுகம்.100:1) என்ற வரியாலும், இளங்கோவடிகள் "தாழ்கழல் மன்னன் தன்திரு மேனி வாழ்க, சேனாமுகம் என வாழ்த்தி" (சிலப்பதிகாரம்.25:191-192) என்ற வரிகளாலும் படைகளின் முக்கியத்துவத்தினை முன்மொழிந்துள்ளனர்.

**படை - பண்பும் பயனும்**

படையென்பது போர் செய்வதற்கு மட்டுமின்றி, பகைவர்களிடையே மன்னனின் மதிப்பினை உயர்த்திக் காட்டுவதற்கும், தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கும், செல்வங்களைப் பெருக்கிக் கொள்வதற்கும், பெருக்கிய செல்வங்களை நாட்டு நலனுக்காகச் செலவிடுவதற்கும், தன்னை நாடிவரும் இரவலர்களுக்குக் கொடை அளிப்பதற்குமான செயல்பாடுகளைக் குறிக்கின்றன. எனவேதான், "ஒருநாட்டு அரசியலுக்குப் படையே அடிப்படை, படையிருப்பின் நாடில்லாதவனும் நாட்டைப் பெறலாம். படையில்லாவிடில் இருப்பனும் நாட்டினை இழப்பான்" என்பார். **(ஆர்.தேவநேயன். பழந்தமிழாட்சி.ப.49)**

**திருவள்ளுவர் காட்டும் படை வீரர்களின் பண்புகள்**

படை வீரர்களின் பண்புகளை விளக்கும் வள்ளுவர், படை என்பது எல்லா உறுப்புகளும் உடையதாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாததாகவும் இருக்க வேண்டும் என்பார். (திருக்குறள்.761) மேலும்,

"அழிவுஇன்று அறைபோகா தூஆகி வழிவந்த
வன்கண் அதுவே படை"

(திருக்குறள்.764)

என்ற குறளில், படையென்பது உயிரையும் பொருட்படுத்தாத ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். வீரம், மானம், மாட்சிமைப்பட்ட நடக்கை, தெளிவு ஆகியவை படைக்குச் சிறப்பானவையாகவும் உணர்த்தப்பட்டுள்ளன. (திருக்குறள்.766) தன்னையெதிர்த்து வரும் படைகளைத் தாங்கி, போரின் தன்மையறிந்து போரிட வல்லதாகவும் இருக்க வேண்டும். (திருக்குறள் 767) மேலும், படைவீரர்களின் தோற்றப் பொலிவானது படைக்கு இன்றியமையாதது எனவும், சிறுமை, வெறுப்பு, வறுமை ஆகியன படைக்கு இருக்கக் கூடாது என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். (திருக்குறள்.768, 769) இவ்வாறான பண்புகளைக் கொண்ட

படையானது தலைசிறந்த தலைவனைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் மிகமிக இன்றியமையாதது என வள்ளுவர் வலியுறுத்துகிறார். (திருக்குறள்.770)

பகைவரை வென்று விடுவோம் என்ற மன உறுதியுடன் இருக்க வேண்டும் எனவும் (திருக்குறள்.771), உயர்ந்த இலக்கை வீழ்த்தவே வீரர்கள் எண்ண வேண்டும் எனவும் (திருக்குறள்.772), ஆற்றலுள்ள பகைவரை வீழ்த்துவதே நோக்க மென்றாலும், பகைவரின் ஆற்றல் குறைந்தவிடத்து, அவருக்குக் கருணை காட்ட வேண்டும் எனவும் (திருக்குறள்.773), போரில் விழுப்புண் படுதலை மிகப் பெருமையாகக் கருதவேண்டும் எனவும் (திருக்குறள்.776), தம் உயிரினும் புகழை உயர்வாகக் கருதவேண்டும் எனவும் (திருக்குறள்.777), யாவரும் கண்களில் நீர் மல்கச் சாதல் ஒரு வீரனுக்குப் பெறற்கரிய பேறாகக் கருதவேண்டும் எனவும் படைகள் மற்றும் படைவீரர்களின் பண்புகளை வள்ளுவர் உணர்த்தியிருப்பது எக்காலத்திற்கும் எந்நாட்டவருக்கும் பொருந்தக் கூடியதாகக் கருதலாம்.

**போர்க்காலங்களில் திரட்டப்படும் படைவகைகள்**

“படையின் இயல்பு, படை இயங்கும் இடம், படையின் செயல் ஆகியவற்றின் அடிப்படையில் மூலப்படை, கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, பகைப்படை ஆகிய ஆறுவகைப் படைகளை மன்னர்கள் வைத்திருந்தாக பரிமேலழகர் குறிப்பிடுகிறார்.” **(பரிமேலழகர் உரை. அ)**

“தமிழகப் படைகள் அது புரியும் ஊழிக்கால அளவு பற்றி மூலப்படை, கூலிப்படை எனவும், படையின் இடம் பற்றி துணைப்படை, பகைப்படை எனவும், படைகள் சேர்ந்துள்ள பக்கம் பற்றி குறிப்பிடும் பொழுது துணைப்படை, பகைப்படை என்றும், பயன்படுத்தும் கருவிகளின் தன்மையைக் கொண்டு கைவிடும் படை, கைவிடாப் படை என்றும் பிரிக்கப்பட்டுள்ளன என்பர்.” **(சாத்தன்குளம் அ.இராகவன். தமிழ்நாட்டுப் படைக்கலன்கள். ப.22)**

தொல்காப்பியப் புறத்திணையும், சங்க இலக்கியப் புறநானூறும் படைகளின் அளவைக் கொண்டு பெரும்படை, மாப்படை, மறப்படை, வியன்படை எனவும், படைசெய்யும் செயலைக் கொண்டு வருபடை, பொருபடை, பெயர்ப்படை, அழிபடை, வெல்படை எனவும் படைகளைக் குறிக்கின்றது. (தொல்காப்பியம். புறத்திணையியல்.5:20, புறநானூறு. 292:7, 270:8, 22:15, 35:24, 239:11, 282:4, 295:4, 35:25, 89:4, 239:12)

மூலப்படை ஒன்று மட்டுமே முறையான பயிற்சியும் அமைப்பும் கொண்ட நிலையான படையாகும். எஞ்சிய ஐந்தும் முறையான பயிற்சியற்ற அல்லது அமைப்பற்ற நெருக்கடியான காலத்தில் உதவும் நிலையற்ற படைகளாகும். எவ்வாறாயினும் படைகள் அனைத்தும் போர் நடைபெறும் இடம் மற்றும் சூழலை வைத்து நிலப்படை, கப்பற்படை என்ற இரண்டே நிலைகளில் தான் அடக்கிக்

கூறப்படுகின்றன. ஊதியத்திற்காகப் பணிபுரியும் வீரர்கள் அடங்கிய படையினைக் கூலிப்படை என்பர். இப்படைதான் இன்றளவிலும் இவ்வையகம் முழுமைக்கும் மக்களை அச்சுறுத்தி வருகிறது. இதற்கென்ற நோக்கம், செயல், எதிர்காலம் என்று எதுவும் கிடையாது. ஏவும் செயலின் வெற்றியால் எவரெல்லாம் பயனடைகின்றனரோ அவர்களுக்காக விரும்பும் ஊதியம் பெற்று செயல்படும் அமைப்பு கூலிப்படையாகும். இது தொன்று தொட்டு நிலவிவரும் மானிடர்களின் இயல்பாக இருந்து வருகிறது.

பன்னெடுங்காலமாக சீறூர் மன்னர்களும் இச்செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை தமிழக வரலாறு எடுத்துரைக்கத் தவறவில்லை. "போர்க்காலத்தில் புதுவதாகக் கூலிக்கமர்த்தப்படும் பிறநாட்டுப் படைகள் கூலிப்படை எனப்படும். இது விலைப்படை எனவும் குறிக்கப்படும். போரில் மூலப்படைக்குப் பல்லாற்றலாலும் துணைபுரிவது, போர் முடிந்த பிறகு கூலியாக பொன், பொருள் முதலியன பெற்றுத் தன் நாட்டிற்குத் திரும்பும் இயல்புடையது என்பார்." **(ரா.பி.சேதுப்பிள்ளை. தமிழர் படைத்திறம். ப.63)**

தமிழக மண்ணில் ஆட்சி செலுத்திய குறுநில மன்னர்கள் சிலர் மிகுதியாகப் பொருள் தர இசையும் பெருவேந்தருக்காகத் தம் படையின் ஒரு பகுதியை அனுப்பி அவன் வெற்றிக்கு வலுச்சேர்க்கும் வழக்கம் இருந்துள்ளதனை அறிய முடிகின்றது. சான்றாக,

**"வீயாத் திருவின் விறல்கெழு தானை**
**மூவருள் ஒருவன், 'துப்பு ஆகியர்' என,**
**ஏத்தினர் தருஉம் கூழே நும்குடி**
**வாழ்த்தினர் வருஉம் இரவலரதுவே"**

(புறநானூறு.122:4-7)

என்னும் புறநானூற்றுப் பாடலில், 'காரி' என்னும் குறுநில மன்னனிடம், மூவேந்தரில் ஒருவன், தனக்குப் படைத்துணை ஆவாயாக எனப் பாராட்டித் தந்த பொருள் வளத்தை 'கபிலர்' என்னும் புலவர் மேற்கண்டவாறு பாடியுள்ளார். எனவே, அன்றைய வேந்தர்கள் போர்க் காலங்களில் குறுநில மன்னர்களிடம் படையுதவி நாடும் வழக்கம் இருந்திருக்கிறது என்பதனை இப்பாடல் மெய்ப்பிக்கின்றது. மேலும், படையுதவி நாடும் வேந்தனுக்குத் தம் கூலிப்படைகளை அனுப்பிப் பொருள் சேர்க்கும் வழக்கம் சீறூர் மன்னர்களிடம் இருந்திருக்கின்றன என்பதனையும் மறுக்கவியலாது.

**"திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்**
**படை வேண்டுவழி வாள் உதவியும்**
**வினை வேண்டுவழி அறிவு உதவியும்**
**வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து**
**அசைதுநுகம் படாஅ ஆண்தகை உள்ளத்துத்**
**தோலா நல்இசை நாலை கிழவன்**
**பருந்துபசி தீர்க்கும் நற்போர்த்**
**திருந்துவேல் நாகற் கூறினர் பலரே"**

(புறநானூறு.179:5-12)

என்ற பாடலானது, ஆண்மையும் சூழ்ச்சியும் சேர்ந்துப் பெற்ற 'நாலை' என்னும் ஊரின் தலைவனான 'நாகன்' என்பவன், பிறருக்குப் படை வேண்டும் பொழுது வாளோடு வீரரையும் கொடுத்து உதவும் குணமானவன் ஆவான். இவன் பேராண்மையுடைய பாண்டியனுக்குப் படையுதவி வேண்டும் பொழுது, வாளோடு வீரர்களையும் கொடுத்தனுப்பினான் என்கிறது புறநானூறு. 'நாலை கிழவன் நாகன்' என்பவனின்

இச்செயல், பண்டைத் தமிழகத்தில் கூலிப்படை இருந்ததனையும், பெருவேந்தனின் நட்புக் குரியவனாக இருந்துள்ளான் என்பதனையும், அதன்பொருட்டு பெருவேந்தன் தம் அன்பளிப்பைப் பரிசுப் பொருட்களாக நல்கியிருக்கலாம் எனவும் கருதலாம்

**துணைப்படை**

ஆநிரை கவர்வதும், மீட்பதுமான தொழிலில் ஈடுபட்ட இனக்குழு மக்களுக்குப் பங்கு தேவையாய் இருந்ததோடு அவர்களின் தேவை நீங்கும் பொருட்டுப் பங்கு கிடைக்கும் பிற அரசுகளுக்காகவும் பொதுமக்கள் படையெனத் திரண்டனர். எனவே, மனிதர்கள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் தனியாகப் படை போன்ற எதுவும் கிடையாது. குழு உறுப்பினர் அனைவருமே தங்கள் தேவைக்காக மட்டுமே ஆயுதம் தாங்கிப் போரிட்டனர். ஆனால், விளைநிலங்களை போர்களின் வாயிலாக கையகப்படுத்தும் அரசுருவாக்கச் சூழலின் ஆரம்ப நிலையில் பொதுமக்கள் படையெனத் திரளும் சூழல் உருவாகின. அதுவே, பின்னாளில் அவர்களை நிலையான படைகளாகவும் உருவாக்கிக் கொள்ளச் செய்துள்ளன. இக்காலங்களில் பெருவேந்தனின் அழைப்பையேற்றுத் திரளும் படைகளுள் துணைப்படையாக இவர்களே போர்க்களம் புகுந்தனர். வேந்தனது நட்பு நாடுகள் தத்தம் படைகளுடன் தமக்குத் துணையாக வரும் சூழலைக் கொண்டு, தனக்குத் துணைவரும் படை, பகைவருக்குத் துணைவரும் படை என இருநிலைகளில் அவற்றைக் கூறுவர். எனவேதான்,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

(திருக்குறள்.471)

என்ற குறளில், தான் செய்யவிருக்கும் ஒரு செயல்திறனையும், அதனை முடிக்கவிருக்கும் தனது ஆற்றலையும், அதற்கு இடையூறு விளைவிக்கும் எதிரியின் வலிமையையும், எதிரிக்குத் துணைப் படையாக நிற்போரின் வலிமையையும் ஆராய்ந்து அச்செயலில் ஈடுபட வேண்டுமென வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். இதுபோன்று துணைப் படையாகச் செல்லும் காலங்களில்தான் மன்னர்களும், மன்னரைச் சார்ந்த போர் வீரர்களும் 'பகைவயிற் பிரிவு' எனப்படும் 'வேந்தர்க் குற்றுழிப் பிரிவு" மேற்கொண்டனர் எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இதனை,

"தானே சேறலுந் தன்னொடு சிவணிய
வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே."

(தொல்காப்பியம்.பொருள்.அகத்.27)

என்ற வரிகளும், **"மன்னர் பாங்கிற் பின்னோ ராகுப"** (தொல்காப்பியம். பொருளதிகாரம். அகத்திணையியல்.30) என்ற வரியும் குறிப்பிடுகிறது. எனவே, வேந்தன் என்பவன் தனித்தும் போரிடுவான். தம் நாட்டிற்கு துணை வேண்டும் பொழுது சீறூர் மன்னர்களை இணைத்தும் போரிடுவான் என அறிய முடிகின்றன. பெரியபுராணத்தில் திருநாவுக்கரசரின் தமக்கையர் திலகவதியாருக்கும், கலிப்பகையாருக்கும் திருமணம் செய்வித்தல் பொருட்டு அதற்கான சடங்குகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் காலத்தில், திருமணச் சடங்குகள் முடியும் முன்னர் தன்னுடைய உற்ற நண்பனை

எதிர்த்து வடநாட்டினர் போர்தொடுத்து வந்ததால் அப்போரினை எதிர்கொள்ள கலிப்பகையார் பகைவயிற்பிரிவு காரணமாக துணைப்படையாகச் சென்றமையை,

> “கன்னித் திருத் தந்தையார்
> மனம் இசைவு கலிப்பகையார்
> முன் அணைந்தார் அறிவிப்ப
> வதுவையினை முடிப்பதன்முன்
> மன்னவற்கு வடபுலத்தோர்
> மாறேற்க மற்றவர்மேல்
> அன்னவர்க்கு விடை கொடுத்தான்
> அவ்வினை மேல் அவர் அகன்றார்”

(திருநாவுக்கரசு நாயனார் புராணம்.51) என்ற பக்தி இலக்கியப் பாடல் வழி அறிய முடிகின்றது. மன்னர்களும், வேந்தர்களும் தங்கள் பகைவர்களோடு போரிட்டுக் கொள்ளும் போது தமக்குத் துணையாகத் தம் நட்பு நாட்டினரின் வீரர்களைப் படைத்துணையாக அழைத்துக் கொண்டுள்ளனர். இவ்வாறான வழக்கத்தை தமிழிலக்கியங்கள் பல சுட்டிக் காட்டுகின்றன. சீறூர் மன்னனாகிய காரி, சேர மன்னனுக்காக ஓரியுடன் போரிட்டு அவனிடமிருந்து கொல்லி மலையைச் சேரன் கைப்பற்றத் துணைபுரிந்தான் என்பதனை அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றன.

> “முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
> செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
> ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
> செவ்வேர்ப் பலவின் பயம்கெழு கொல்லி”

(அகநானூறு.209:12-15)

என்ற பாடலானது, போர்க் காலங்களில் சீறூர் மன்னர்கள் பெருநில வேந்தருக்கு உடன்பாட்டின் அடிப்படையில் போருக்குத் துணை புரிவது துணைப்படை என என்கிறது. மேலும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன், இருபெரும் வேந்தர்களையும் (சேரன், செம்பியன்) ஐம்பெரு வேளிர்களையும் (திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்) எதிர்த்துப் போரிட்டு தனக்கு அடங்கிக் கிடக்குமாறு வெற்றி பெற்றான் என அகநானூறும், (36,175,209) புறநானூறும் (19:16-17,76:12-13) மதுரைக் காஞ்சியும் (55-66,127-130) குறிப்பிடுகிறது. எனவே, படைத் துணையோடு பகையரசர்கள் பாண்டியனோடு போரிட்டுத் தோற்ற வரலாறும் சங்க இலக்கியத்தில் இடம்பெருகின்றன.

எனவே, படைத் துணையாக வருபவர்கள்தாம் போர்க்கள வெற்றியைத் தீர்மானிப்பதற்குப் பெரும்பங்காற்றுகிறார்கள் என்றாலும், துணைப் படையின் பேருதவி இருந்தும் தோற்றுப் போன பேரரசுகளின் நிலையும் இங்கே பதிவு செய்யப்பட்டிக்கின்றன. எனவே, போர்க்களம் புகுந்து போரிட்டுக் கொள்ளும் எந்த நாட்டு வீரர்களுக்கும் பெரும் படைகளும், படைக்கலன்களும் மட்டுமே எப்போதும் வெற்றியைத் தீர்மானித்து விடாது. அதைத்தாண்டி போர்த் தந்திரங்கள், போர் வீயூகங்கள், போர்ப் பயிற்சிகள், உணவு மருத்துவம் வணிகம் உள்ளிட்ட பொருளாதார வலிமைகள் போன்ற காரணங்களும் ஒருங்கே பெற்றிருந்தால் தான் இன்று மோதிக்கொள்ளும் உலக வல்லரசுகளுக்கிடையே தன்னையும் தன்நாட்டையும் நிலை நிறுத்திக்கொள்ள முடியும். எனவே, அடிப்படைப் போர்க் கல்வியை அனைவரும் கற்றிருக்க வேண்டும் என்பதனைத் தலையாலங்கானத்துப் போரை வென்ற பாண்டிய நெடுஞ்செழியனைப்

போன்ற பல்வேறு தமிழகவேந்தர்களின் வரலாறு, நடப்புச் சமூகம் கற்றுக் கொள்ள வேண்டிய சரியான பாடமாக அமைகின்றன.

தமது நட்பு நாட்டின் மன்னனுக்காக தம் படையுடன் சென்று போரில் வெற்றி பெற்றதோடு தன்னுயிரையும் இழந்தான் என்ற செய்தியினை,

"திரிபுவனமல்ல பூராதிராயன் அத்திமல்லன்
முதலிகளில் தாமந்த் தேவற்கடியார்
மகன் மாரழ்வான் நரசிங்க தேவநுக்கு
படைத்துணை போய் பட்டான்"

என இன்றைய தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சின்னக் குத்தூரில் கிடைத்த வீரக்கல் ஒன்று குறிப்பிடுகின்றன.

சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்கும் நடந்த போரில் 'தேர்வண் மலையன்' என்னும் சீறூர் மன்னன் சோழனுக்குத் துணைப் படையாக வந்து பெரும் வெற்றிக்கு வித்திட்டதால் கள்ளொடு புலால் உண்டு இன்புற்றிருந்தான். 'நீ உண்ணும் உணவு அமிழ்தமாய் நீண்ட வாழ்நாளை நினக்கு நல்குமென' வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இதனை,

"விரைந்து வந்து, சமம் தாங்கிய
வல் வேல் மலையன் அல்லன் ஆயின்,
நல் அமர் கடத்தல் எளிது மன், நமக்கு' எனத்
தோற்றோன் தானும், நிற் கூறும்மே..."

(புறநானூறு.125:13-16)

என்னும் பாடல்வழி விளக்கியுள்ளார். இப்பாடலில் தேர்வண் மலையனின் போர்த்திறத்தைக் கண்டு நன்றியறிவால் வென்றோர் பாராட்டி மகிழ்வது போல், தோற்றோரும் அவனது பேராண்மையை வியந்து போற்றுவதுமான நிகழ்வுகள் முருகக் கடவுளுக்கு மட்டுமே கிட்டும் எனக் கூறப்பட்டுள்ளன. தமிழகத்தில் வாழ்ந்த ஒரு சீறூர் மன்னனை நண்பரும் பகைவரும் ஒப்பப் பாராட்டும் சிறப்பு தமிழர் போரரசியலின் உயர்ந்த பண்பாடாகச் சொல்லலாம். அதே நேரத்தில் பண்டைத் தமிழகத்தில் நிகழ்ந்த அனைத்துப் போர்களிலும் துணைப்படை கட்டாயம் இருந்துள்ளன எனச் சொல்லிவிட முடியாது. ஏனெனில்,

"துணை வேண்டாச் செரு வென்றி"

(புறநானூறு.16:10)

என்னும் பாடல் வரியானது, பகைவர்களுக்கு அச்சம் தரும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி துணைப் படையோடு முன்னர் சேரனை வீழ்த்தியவன் எனினும், துணைப் படை இல்லாமலும் பெரும் போர்களைச் சந்தித்து வென்றிருக்கிறான் என்பதை குறிப்பால் உணர்த்துகின்றன. எனவே, துணைப் படை என்பது தேவை கருதி மட்டுமே பெரும் போர்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், பேரரசுகளின் அழைப்பையேற்கும் மனநிலை இல்லாததால் சீறூர் மன்னர்கள், சில போர்களுக்கு ஆதரவளிக்காமல் தவிர்த்திருக்கலாம். இச்செயல் பாடுகள் கூட தங்களுக்குள் போரிட்டுக் கொள்ள எதிர்காலத்தில் வழிவகை செய்திருக்கக்கூடும். துணைப்படை என்பது பேரரசுகளின் நட்பு நாடாகக் கருதலாம். இது கூலிப் படையினின்றும் வேறுபட்டது.

**முடிவுரை**

பொதுவாகப் படைகள் அவற்றின் செயலாற்றலாலும், படைக் கலன்களைக் கொண்டு அவற்றைக் கையாளும் திறத்தாலும் பல்வேறு வகைகளாகவும், பிரிவுகளாகவும் குறிப்பிடப்பட்டன. இன்று படைகளின் முப்பிரிவுகள் என்பது தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை என்பவற்றைக் குறிக்கும். ஆனால், பழங்காலத்தில் படைப்பிரிவுகள் என்பது காலாள், யானை, குதிரை, தேர் ஆகிய நாற்படைகளையே குறிக்கும். நெடுங்காலம் நீடித்திருந்த களிற்றுப் படையும், குதிரைப் படையும் மிகப்பிற் காலத்தில் போர்களில் பயனற்றுப் போயின. போர்களில் அல்லாமல் மங்கல நிகழ்ச்சிகளுக்கு யானைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தேர்ப்படை என்பது இன்றைய இராணுவத்தினருக்கு வாகனங்கள் செல்லவியலா பாதைகளில் செல்ல மட்டுமே பயன்படுகின்றன. தொழில் நுட்பம் போருக்குள் நுழைந்ததன் விளைவு தான் மரபார்ந்த களிற்றுப்படையும், குதிரைப்படையும் பயனற்றுப்போயின என்றாலும், இப்படைகளை எளிதில் வீழ்த்தும் தந்திரத்தினைக் காலப்போக்கில் நிகழ்ந்த அந்நியர் படையெடுப்புகளால் அறிந்து கொண்டனர் என்ற காரணமும் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், முடியாட்சிக் காலங்களில் வேந்தர்கள் ஒருவரோடொருவர் பொருதும் பெரும்போர்களில் உறுதியாக வெற்றி வாகை சூட தமது நட்பு நாடுகளின் துணைப்படை வேண்டியே பல போர்களை நிகழ்த்தியுள்ளன என்பதனைச் சங்க இலக்கியக் குறிப்புகளின் வழி நன்குணர முடிகின்றன. எனவே, மனித வாழ்வின் அகத்திலும் புறத்திலும் துணை என்பது எப்போதும் கூடுதல் வலிமையாகவே நம்பிக்கை கொள்ளப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. இராசமாணிக்கம், இரா., (உ.ஆ) - **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்' (மூலமும் உரையும்)** கழக வெளியீடு, திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். சென்னை. முதற்பதிப்பு – 1947
2. கந்தையாப்பிள்ளை, ந.சி., (தொ.ஆ) -'செந்தமிழ் அகராதி' கழக வெளியீடு, சென்னை – 01. முதற்பதிப்பு – 1957.
3. கணகசபாபதி, முதலியார், வி., - 'திருநாவுக்கரசு நாயனார் புராணம்' வ.உ.சி நூலக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு – 2007.
4. சாத்தன்குளம், அ., இராகவன், - **'தமிழ்நாட்டுப் படைக்கலன்கள்'** அமிழ்தம் பதிப்பகம், திருநெல்வேலி.
5. சேதுப்பிள்ளை, ரா.பி., - **'தமிழர் படைத்திறம் பண்டைத்தமிழர் பண்பாடு'** பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, திருச்சி, முதற்பதிப்பு – 1966.
6. **தொல்காப்பியம், - (எழுத்து, சொல், பொருளதிகாரம்)** உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், கணேசையர் பதிப்பகம்,

சென்னை 600113. இரண்டாம் பதிப்பு 2007,

7. தேவநேயன்,ஆர்., - 'பழந்தமிழராட்சி' பூம்புகார் பதிப்பகம், சென்னை 08. முதற்பதிப்பு – 2012.
8. பரிமேலழகர், (உ.ஆ)., - 'திருவள்ளுவர் திருக்குறள்' கங்கை புத்தக நிலையம், நான்காம் பதிப்பு – 2002. சென்னை.
9. பாலசுப்பிரமணியம், கு.வெ., ஆ.பரிமணம் (ப.ஆ) - **எட்டுத்தொகை, பத்துப்பாட்டு (சங்கஇலக்கியம்)** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை 600 098. முதற்பதிப்பு - 2004.
10. வேங்கடசாமி, நாட்டார், ந.மு., கௌமாரீஸ்வரி, எஸ்., (ப.ஆ) - **'இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்'** (மூலமும் உரையும்), ராமையா பதிப்பகம், சென்னை - 14, முதற்பதிப்பு 2008.